

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் மாவட்டம், குமாராட்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிக்கட்டளை பகுதியில் நியாய விலைக்கடையை திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு. ம.சிந்தனைசெல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா.சரண்யா, சிதம்பரம் சார் ஆட்சியர் ரஷ்மி ராணி உட்பட பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் தலைமையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி, துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி கோ.மலர்விழி உட்பட பலர் உள்ளனர்.

# அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள்!

## அமைச்சர்கள் வி. செந்தில்பாலாஜி - மா.மதிவேந்தன் பெற்றுக்கொண்டனர்!

கரூர், டிச. 30 -

மின்சாரம், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மரு. மா.மதிவேந்தன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்தாவது

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ் நாட்டு மக்களின் நலனிற்காக பல்வேறு சிறப்பான நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். சட்டமன்ற தொகுதிகளில் தேர்வு செய்யப்பட்டு 20 இடங்களுக்கு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் நேரில் வருகை தந்துமனுக்களை பெற்றுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 24 மணிநேரத்தில் 20 மணி நேரம் தமிழ்நாட்டு மக்களுக்காக ஓய்வறியாமல் உழைத்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களுக்கு ஒரு இன்னல் என்றாலும் கூட நேரில் சென்று மக்களுக்கான தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்யக்கூடிய முதலமைச்சரையும், துணை முதலமைச்சரையும் நாம் பெற்றிருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு அரசு வேளாண் கல்லூரி, மாவட்டத்தில் வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் 200 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் நிறுவனம் மற்றும் ஐடி பார்க் வழங்கியுள்ளார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவசமின் இணைப்புகளை வழங்கி விவசாயிகளின் நலன் காக்கும் அரசாக திகழ்கிறது. அரசு நிலமற்ற ஏழை எளியோர்க்கு வீட்டு மனைகளையும் கொடுத்து அவற்றுக்கு பட்டாக்களையும் வழங்கி கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் வீடுகளும் கட்டிடத் தரப்பட்டு வருகிறது. அந்த வகையில் கரூர் மாவட்டத்தில் 2024.25ஆம் ஆண்டில் கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு 749 வீடுகள் கட்டித் தரப்பட உள்ளது.

கிராமப்புறங்களில் குடிசை வீட்டில் வாழ்பவர்களுக்கு வீடுகள் பராமரிப்பு செய்வதற்காக 2000 பயனாளிகளுக்கு நிதிகள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. கரூர் கோவை சாலை நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கான ரூ.110 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அதற்கான பணிகள் நடைபெற்றுவருகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கரூர் மாவட்டத்தின் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக கடந்த மூன்றரை ஆண்டுகளில் ரூ.2000 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து வளர்ச்சித் திட்டப் பணிகள் நடைபெற்றுள்ளது. அந்த வகையில் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புஞ்சைதோட்டக்குறிச்சி பேரூராட்சி 5வது வார்டு குப்பம் ஊராட்சி நஞ்சைக் காளக்குறிச்சி ஊராட்சி ஆலமரத்துப்பட்டி ஊராட்சி மற்றும் ஈசநத்தம் ஊராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இன்று பெறப்படும்அனைத்து மனுக்கள் மீது உடனடியாக பரிசீலனை செய்து தகுதியுடைய அனைவருக்கும் தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளை விரைவாக வழங்குமாறு தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடைக்கோடியில் வசிப்பவருக்கு கூட தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகள் சென்று சேர வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தேர்தல் வாக்குறுதிகளில் 90 சதவிகித வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டார்கள். வாக்குறுதியில் சொல்லாத திட்டங்களையும் பல்வேறு புதிய திட்டங்களையும் மகளிர் மற்றும் தொழில் முனைவோர்கள் ஆகியோர் பயன்பாட்டிற்காகவும் எண்ணற்ற திட்டங் களை செயல்படுத்தி இருக்கிறார்கள்.

தமிழ்நாடு அரசின் மக்களை நாடி அவர்களின் குறைகளை தீர்க்க முதலமைச்சர் அவர்கள் பொது மக்களிடம் சென்று அனைத்து துறைகளை உள்ளடக்கிய மனுக்களை பெறும் மக்களுடன் முதல்வர் திட்டத்தை அறிமுகப்படுத்தி அரசு இயந்திரங்கள் மக்களை தேடி உங்களுக்கு அலைச்சல் கொடுக்காமல் அப்பகுதிகளுக்கே சென்று மனுக்களை பெற்று 30 நாட்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளும் இது ஒரு முத்தாய்ப்பான திட்டமாகும். தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக பொதுமக்களை சந்தித்து கோரிக்கை மனுக்கள் பெறும் நிகழ்ச்சி இன்றைய தினம் கரூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. பெறப்படும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திராவிட மாடல் ஆட்சியில் ஆதிதிராவிட மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். மிக முக்கியமாக ஒடுக்கப்பட்ட மக்கள் உயர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியில் நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார்கள். அதனடிப்படையில் ஆதிதிராவிட மக்களுக்கு இன்னும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்த நிகழ்ச்சியை இன்று தொடங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், (குளித்தலை). ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஸ்ரீலேகா தமிழ்செல்வன், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமதுபைசல், உதவி இயக்குநர் ஊராட்சிகள் சரவணன், தனித்துணை ஆட்சியர்(சமூக பாதுகாப்புத் திட்டம்) பிரகாசம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் தொகுதியில் 12 புதிய கட்டிடங்கள்!

## பூண்டி கே.கலைவாணன் திறந்துவைத்தார்

திருவாரூர், டிச. 30 -

திருவாரூர் சட்டமன்ற தொகுதியில் திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களான 12க்கும் மேற்பட்ட புதிய கட்டிடங்களை மாவட்டக்கழக செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை ஏற்று மக்கள் பிரதிகளின் முன்னிலையில் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்கள் ஒவ்வொரு மக்களுக்கும் சென்று சேர்ந்து,அனைத்து தரப்பினராலும் பராட்டப்படுவது இந்திய துணைக் கண்டமே திரும்பி பார்க்கும் அளவுக்கு புகழ்பெற்றிருக்கிறது.மேலும் திருவாரூர் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் மக்கள் நலத்திட்டங்கள் மின்னல் வேகத்தில் நிறைவேற்றப்பட்டுவருவது மக்களின் பாராட்டினை பெற்றுவருகிறது.

இந்த வகையில்திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வந்தன.

மன்னார்குடி கிழக்கு ஒன்றியத்தில் திருராமேஸ்வரம் வாழ்வாதார செயல்பாடுகள் மேற்கொள்வதற்கான கட்டிடம் , கொத்தங்குடி ஊராட்சி நியாய விலைக்கடை, திருவாரூர் ஒன்றியத்தில் தப்ளாம்புளியூர்பயணிகள் நிழற்குடை, வாஞ்சூரில் அங்கன்வாடி மையம்,, காரியங்குடி நியாயவிலைக்கடை, அடியக்கமங்கலம் ஊராட்சியில் ஆண்டிப்பாளையம் நியாயவிலைக்கடை, மேலத்தெருஅங்கன்வாடி மையம், கல்லிகுடி ஊராட்சியில் பொது விநியோக கட்டிடம், சமையற்கூடம், புலிவலம் ஊராட்சியில் புலிவலம் மற்றும் வேங்கடேஸ்வரபுரம் அங்கன்வாடி மையங்கள் ,வடகரை ஊராட்சியில் அங்கன்வாடி மையம், பள்ளி வார மங்கலத்தில் சமையற்கூடம், கொட்டரக்குடி ஊராட்சியில் மீன் மார்க்கட், குன்னியூர் ஊராட்சியில் மீன் மார்க்கெட் ,உமா மகேஸ்வரம் ஊராட்சியில் கீழதுரைக்குடி பொதுவிநியோக கட்டிடம் உள்ளிட்ட புதிதாக கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடங் களை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே. கலைவாணன் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார்.

இந்த நிகழ்வுகளில் ஒன்றியக்குழு தலைவர் புலிவலம் ஏ.தேவா, ஒன்றிய செயலாளர் ஐ.வி.குமரேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.செல்வம் , சார்பு அணி நிர்வாகி சேனக்கரை கண்ணன் மற்றும் முன்னாள் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ராயல் ராதாகிருஷ்ணன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், பாமா கண்ணன் , கார்த்திகா ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், கழக தோழர்கள் பொதுமக்கள்,அரசு அதிகாரிகள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.

# தாழையூத்தில் ரூ,2.8 கோடியில் வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தலைமையில் டி.பி.எம்.மைதீன்கான் துவக்கி வைத்தார்!

நெல்லை.டிச.29-

நெல்லை மாவட்டம் மானூர் ஊராட்சி ஒன்றியம் தாழையூத்து ஊராட்சியில் முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 2.8 கோடி மதிப்பில் வளர்ச்சி திட்ட பணிகள் துவக்க விழா

நிகழ்வு பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் தலைமையில் தாழையூத்து ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.வி.எஸ். பீர்மைதீன்,மானூர் ஒன்றிய குழு தலைவர் செல்வி ஸ்ரீலேகா அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது,சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் குறிச்சிகுளம் நிஜாம் வரவேற்புரையாற்றினார்.

மானூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் மத்திய மாவட்டம் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று ரூபாய் 2.8 கோடி செலவில் பல்வேறு திட்ட பணிகளை துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநகராட்சி துணை மேயர் ராஜு, மாவட்ட ஆதி திராவிட நல குழு அணி அமைப்பாளர் நவநீதன்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சபிமுகமது, தாழையூத்து ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பேச்சியம்மாள், சரஸ்வதி,சீதாலட்சுமி,இசக்கிராணி, சாரதா, முத்துக் குமார், மாரீஸ்வரி, வள்ளி, அப்துல் தானிஷ், சித்தி பாத்திமா, நாகராஜன்,கிளை கழக செயலாளர்கள் முஜ்பூர் ரகுமான், தாழை ஜமால், நிஜாம், பெருமாள்,அமல்ராஜ்,சந்துரு, பண்டாரம், சுப்புலட்சுமி. கிளை கழக நிர்வாகிகள் சேக் முகைதீன், இக்பால்,இஸ்மாயில், ஜோசப்ராஜ்,ரியாஸ்,சரவணன், ராமச்சந்திரன்,ரவி மற்றும் முகைதீன் ஆண்டவர் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் முகம்மது கனி, பொருளாளர் அயூப் கான், அபுபக்கர் சித்திக் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் முகம்மது அனீபா,செயலாளர் முகமது அலி, பிலால் ஜும்மா பள்ளிவாசல் செயலாளர் முகைதீன் அப்துல் காதர், உட்பட பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் தாழையூத்து ஊராட்சி மன்ற துணை தலைவர் காஜா மைதீன் நன்றியுரையாற்றினார்.

### ரூபாய் 5 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில்

# தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய பல்வேறு துறைச் சார்ந்த அரசு கட்டடங்கள்!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்தார்!

தஞ்சாவூர், டிச. 30 -

தஞ்சாவூர் மாவட்டத்தில் பூதலூர், திருவையாறு மற்றும் தஞ்சாவூர் ஒன்றியங்களில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது. தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் ஒன்றியம் முத்துவிரகண்டியன்பட்டி ஊராட்சியில் ரூ.13.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், முத்தாண்டிப்பட்டி ஊராட்சியில் ரூ.12.67 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், ஆச்சாம்பட்டி ஊராட்சியில் ரூ.12.76 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், ஆச்சாம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ.32.80 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இரண்டு வகுப்பறை கட்டடமும், புதுக்குடி ஊராட்சி நண்டம்பட்டியில் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொது விநியோகக் திட்ட கட்டடமும், சுரக்குடிப்பட்டி ஊராட்சியில் ரூ.17.85 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், காங்கேயம்பட்டி ஊராட்சியில் விண்ணூர்பட்டியில் ரூ.9.67 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், மாரனேறி ஊராட்சியில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், சோழகம்பட்டி ஊராட்சியில் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொது விநியோகக் திட்ட கட்டடமும், கச்சமங்கலம் ஊராட்சியில் ரூ.15.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொது விநியோகக் திட்ட கட்டடமும், ஆற்காடு ஊராட்சியில் ரூ.12.21 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், தீட்சசமுத்திரம் ஊராட்சியில் ரூ.30.10 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், திருக்காட்டுப்பள்ளி ஊராட்சியில் கூடநாணலில் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், பவனமங்கலம் ஊராட்சியில் ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கிராம செயலக கட்டடமும், திருவையாறு ஒன்றியம் வரகூர் ஊராட்சி ஆதி தெருவில் ரூ.17.85 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், வரகூர் ஊராட்சியில் ரூ.17.85 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், அம்மையகரம் ஊராட்சியில் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், கோனேரிராஜபுரம் ஊராட்சி மணத்திடலில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொது விநியோகக் திட்ட கட்டடமும், திருவலம்பொழில் ஊராட்சியில் ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், கண்டியூர் ஊராட்சியில் ரூ.30.10 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், ரூ.17.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும்,

தஞ்சாவூர் ஒன்றியம் இராஜேந்திரம் ஊராட்சியில் ரூ.29.77 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொது விநியோகக் திட்ட கட்டடமும், ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நேரடி நெல்கொள்முதல் நிலைய கட்டடமும், மானாங்கோரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ.30.05 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இரண்டு வகுப்பறை கட்டடமும், களிமேடு ஊராட்சியில் ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், ஜெபமாலைபுரம் ஊராட்சியில் ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், கள்ளபெரம்பூர் 1 சேத்தி ஊராட்சியில் ரூ.28.92 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொது விநியோகக் திட்ட கட்டடமும், ஆலக்குடி ஊராட்சியில் ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொது விநியோகக் திட்ட கட்டடமும், ஆலக்குடி ஊராட்சியில் ரூ.29.58 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், வண்ணாரப்பேட்டை ரூ.16.38 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும் என மொத்தம் ரூபாய் 5 கோடியே 98 இலட்சத்து 51 ஆயிரம் மதிப்பீட்டில் திட்டப் பணிகளை துவக்கி வைத்து மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இன்றைய தினம் பூதலூர், திருவையாறு மற்றும் தஞ்சாவூர் ஒன்றியத்தில் ரூபாய் 5 கோடியே 98 இலட்சம் மதிப்பிலான திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் மேம்பாடு பெற வேண்டும் என்ற நோக்கில் தமிழக அரசு இத்திட்டங்களை விரைந்து செயல்படுத்தி உள்ளது. அங்கன்வாடி மைய கட்டடம், பொதுவிநியோகக் திட்ட கட்டடம், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம், கிராம செயலக கட்டடம், அங்கன்வாடி மைய கட்டடம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இரண்டு வகுப்பறை கட்டடம் போன்ற சிறப்பான திட்டப் பணிகளுக்கான புதிய கட்டடங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் மகளிருக்கு மாதம் ரூ.1000 உயர்கல்வி பெறுகிற மாணவிகளுக்கு மாதம் ரூ.1000, தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு ரூ.1000 போன்ற திட்டங்களும், மக்களைத் தேடி மருத்துவம், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" போன்ற திட்டங்கள் முன்னேற்ற திட்டங்களாக திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. பொது மக்கள் அனைவரும் இது போன்ற திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.மு. பாலகணேஷ், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர். உஷா புண்ணியமூர்த்தி, ஒன்றியக் குழுத் தலைவர் ச.அரங்கநாதன் (எ) கல்லணை செல்லக்கண்ணு (பூதலூர்), வட்டாட்சியர்கள் அருள்ராஜ் (தஞ்சாவூர்), மரிய ஜோசப், தர்மராஜ் (திருவையாறு), வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### ஸ்டாலின் குமார் எம்.எல்.ஏ. தலைமை! திருச்சி வடக்கு

# மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை-மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி!

## தர்மன் ராஜேந்திரன் - எழில்மாறன் செல்வேந்திரன் சிறப்புரை!

திருச்சி, டிச.30-

திருச்சி வடக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கவிதை மற்றும் திரைப்பட வசனம் ஒப்புவித்தல் போட்டி துறையூர் ஏவிஎஸ் மண்டபத்தில் 25.12 .2024 புதன்கிழமை அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியினை காலை 9 மணி அளவில் துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் துவங்கி வைத்தனர். விழாவில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாநில துணைச் செயலாளர் எழில் மாறன் செல்வேந்திரன் அவர்கள் பாராட்டு சான்றிதழும் ரொக்கப்பரிசும் அளித்தார். முதல் பரிசாக ரூபாய் 10,000, இரண்டாம் பரிசாக ரூபாய் 7000, மூன்றாம் பரிசாக ரூபாய் 5000, ஆறுதல் பரிசு 10 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. ஒப்புவித்தல் போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் லெனின் காசிராஜன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களை பாராட்டி துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார் அவர்கள் உரையாற்றினார். மேலும், வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டியும், கலைஞரின் புகழினை போற்றும் வகையிலும் மாநில கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணை பொதுச்செயலாளர் எழில் மாறன் செல்வேந்திரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினர். நன்றியுரை வாலிஸ்புரம் தமிழரசன் அவர்கள் கூறினார். நிகழ்ச்சியில் நகர செயலாளர் மெடிக்கல் நா முரளி ஒன்றிய செயலாளர்கள் இள. அண்ணாதுரை, சிவ சரவணன், வீரா (எ) வீரபத்திரன், தங்கவேலு, திருஞானம், ஒன்றிய குழு பெருந்தலைவர் சரண்யா மோகன் தாஸ், நகர பெருந்தலைவர் செல்வ ராணி மலர்மன்னன், பொதுக்குழு உறுப்பினர்கள் கிட்டப்பா, பூபதி மாவட்ட அணி அமைப்பாளர்கள் சுரேஷ்குமார், அம்மன் பாபு, திருமூர்த்தி, செல்லமுத்து, நரேஷ் குமார், வருண்ராஜ் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியினை திருச்சி வடக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவை மாவட்ட தலைவர் கஷ்டம்ஸ் மகாலிங்கம், துணைத் தலைவர் செல்வராஜ், மாவட்ட அமைப்பாளர் லெனின் காசிராஜன், துணை அமைப்பாளர்கள் தமிழரசன், ராஜ்குமார், தங்கையா, பிரபு, இளங்கோ, வையாபுரி ஆகியோர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். பேச்சுப் போட்டியில் 25க்கும் மேற்பட்ட பள்ளியிலிருந்து 150க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ மாணவியர்கள் வருகின்ற ஜனவரி 4ம் தேதி அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ள மாநில அளவிலான பேச்சுப் போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றார்கள்.